# நாவேந்தன்



விலை சதம் 25

இலக்கியத் திங்கள் இதழ்

# With Compliments

Of

# STERLING PRODUCTS

99 Main Street,

COLOMBO Phone 21984

"வே. ஜெயரத்துரை"
35, [illegible] வீதி
யாழ்ப்பாணம்.


# ஸ்ருடியோ பிறின்சஸ்

## சுன்னுகம்.

## இனும்! இனும்!! இனும்!!!

**ரொக்கப் பரிசுகள் மூன்று**

*தீபாவளித் திருநாளையொட்டி*

## 25-10-70 முதல் 5-11-70 வரை

அரைச்சலார் சலுகைக் கட்டணத்துடன்
எம்மிடம் புகைப்படம் பிடித்துக்கொள்பவர்கள், மேலும்

## மூன்று ரொக்கப் பரிசுகளைப்

பெற்றுக்கொள்ள நாம் ஒழுங்கு செய்துள்ளோம்.

**அதிர்ஷ்ட தேவதையின் ஆசி பெற்ற**

இலக்கங்களுடைய ரசீதுகளைப்
பெற்றுக்கொள்ள எம்மிடம்

## புகைப்படம் எடுத்துக்கொள்ள முந்துங்கள்!

| | | |
|---|---|---|
| முதற் | பரிசு ரூபா | 50-00 |
| இரண்டாவது | ,, ,, | 25-00 |
| மூன்ருவது | ,, ,, | 15-00 |

**அதிர்ஷ்டம் பார்க்கும் தேதி 6-11-70**

# Studio Princess

Prop: K. M. NADARASA

CHUNNAKAM

யாழ்ப்பாணத்தில்

# சேப்பிங் மெஷின்

★ இஞ்சின் கெற்றுக்கள் பேஸ்பண்ணுதல்

★ குறாவுகள் வெட்டுதல்

★ பல்லு வீல்கள் புதிதாக இணக்குதல்

**சகல வித கடைச்சல், வெல்டிங், வேலைகளும், நவநாகரீக இரும்புக் கிறில்கள், கேற்றுகளுக்கும்,**

## ஸ்ரார் எலக்றிக் வெல்டேஸ்
அன்ட்
## ரேணிங் வேக்ஸ்

வெலிங்டன் சந்தி, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# நாவேந்தன்

மலர். 2 | ஆண்டுமலர், ஆகஸ்ட் செப்டம்பர் 1970 | இதழ். 8



"நாவேந்தன்"

நிர்வாக ஆசிரியர்
ரி. எஸ். ஆனந்தன்

✶

அலுவலகம்
"மலரகம்"
ஏழாலை—வடக்கு,
சுன்னாகம்.

✶

தனிப்பிரதி விலை சதம் –50
வருட சந்தா ரூபா 6/–



"நாவேந்தன்" இதழில் வெளியாகும் சகல படைப்புக்களுக்கும், அவற்றை எழுதும் எழுத்தாளர்களே பொறுப்பாளர்களாவர்.


## இந்த இதழில்.........!


- அன்பார்ந்த வாசகரே...!
- அறிவுக்குத் தடையா? (தலையங்கம்)
- இரசிகமணி கனகசெந்திநாதன்
- தா. சண்முகநாதன் (கிணறுகாவி)
- கவிஞர்ச. வே. பஞ்சாட்சரம்
- கரவைத்தயா
- சுதந்திரராஜா
- எஸ். செல்வராசா
- சி சண்முகவடிவேல்

நாவேந்தன் ஆகியோர் எழுதியுள்ளனர்.


அட்டைப் படம்

**இரசிகமணி**
**கனகசெந்திநாதன்**

# அன்பார்ந்த வாசகரே!

இந்த இதழை மிகத் தாமதமாக வெளியிட நேர்ந்தாலும் வாசகர்களுக்கு மிகவும் பிடித்தமான ஒரு இலக்கியப் படைப்பாக, ஆண்டு மலராக வெளியிடுவதில் எனக்கு அதிகம் மகிழ்ச்சி உண்டாகிறது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில்நாவேந்தன் முதல் இதழ் வெளிவந்தது. சிலர் பராட்டினார்கள். வேறு சிலர் கவனத்துக்குரியதாகக் கருதிக் கொண்டிருந்தார்கள். மிகப்பலருக்கு இதனைப்பற்றிய பிரக்ஞையே இல்லாதிருந்தது இன்னொரு பகுதியினர் என்னையும், பத்திரிகையினையும் இல்லாமற் செய்துவிடுவதே இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டு வந்தார்கள். இந்த நிலையில் எனது உயிர்மூச்சே இதுதான் என்று கருதிக்கொண்டு தாமதமானலும் இதழ்களை வெளியிட்டே வந்தேன். எதிர்பாராத இடங்களிலிருந்து ஆதரவும், எதிர்பாராத இடங்களிலிருந்து ஆதரவின்மையும் வெளிப்படவே செய்தன. ஆயினும் எனது ஆர்வம் குன்றவில்லை. ஒரு ஆண்டு நிறைவுறும் இச்சமயத்து எட்டு இதழ்கள் மட்டுமேவர நேர்ந்தது, முடிந்தளவு இலக்கியப் பணி செய்துள்ளேன் என்ற திருப்தி எனக்கிருக்கிறது. ஈழத்திலும், தமிழகத்திலும் பண வசதி படைத்தவர்களும், பிரபலமானவர்களும், பிரபலம் பெற்ற எழுத்தாளர்களுங் கூடத் தமது பத்திரிகைகளைக் குறிப்பிட்ட காலத்தில் வெளியிட முடியாதிருக்கும்போது எனது பத்திரிகை தாமதமாக வருவதில் பெரிய தவறிருப்பதாக யாரும் கருத வேண்டியதில்லை. அவ்வளவு வசதியீனங்கள் எனக்கு நிறையவுள்ளன. என்ருலும் தொடர்ந்து நாவேந்தன் இதழ்கள் மலர்வதில் எவ்வித தடையும் ஏற்படாது! தாமதத்திற்காகத்தான் வாசகர்களோடு நானுஞ் சேர்ந்து வருந்த நேரிடுகிறது. இது தனி ஒரு மனிதனின் இலக்கிய முயற்சியானலும், சமுதாயத்திற்கு மிக இன்றியமையாத கருத்துக்களுடன், இலக்கிய நம்பிக்கைகளுடன் வெளிவருவதால் இந்த ஆண்டில் வாசகர்களும். ஆதரவாளர்களும், விளம்பரதாரர்களும் மேலும் உதவுவார்கள் என்றும் எமது தேசிய இலக்கிய முயற்சி சுடர்விட்டுப் பிரகாசிக்கும் என்றும் திடமாக நம்புகிறேன்.

— நாவேந்தன்

தலையங்கம்

# அறிவுக்குத் தடையா?

தென்னிந்திய சஞ்சிகைகளின் வர்த்தக ரீ தி யா ன இறக்குமதியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற கருத்து நமது நாட்டின் தமிழ் இலக்கிய ரசிகர்களதும், எழுத்தாளர்களதும், மற்றும் தேசிய இலக்கிய உணர்வு மிக்க அரசியல்வாதிகள், பிரமுகர்களதும் கோரிக்கையாக மாறி விட்ட இச் சமயத்தில் விடயத்தையே திசை தி ரு ப் பி விடத் தக்க நச்சுத்தனமான செய்திகளேயும், பிரசாரங்களேயும் தமிழ் மக்களிடையேயுள்ள வகுப்புவாத ச க் தி களும், அரசியல்காரர்களும், ப த் தி ரி கை களும் திட்டமிட்டுப் பரப்பிவருகின்றன. இந்த விடயத்தில் த மி ழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்! எ த் த னை யோ ஆண்டுகளாக இந்த நாட்டில் தமிழ் எழுத்தாளர்கள் தமது பணத்தையும், சக்தியையும் செலவழித்து, இலக்கிய வேட்கைக்காகவே தம்மை ஆகுதி செய்து கொண்டு இன்னலுற்றுர்கள், அலறுகிறுர்களே தவிர அவர்கள் வளமாக வாழவில்லே. அவர்களது படைப்புக்கள் பி ர பலம் பெறவில்லே. தேசிய இலக்கியம் பொலிவு பெறவில்லே. இதற்கு மாருக முதலாளித்துவ முண்டு கொடுத்தலின் உதவியுடன் தென்னிந்திய ஏகபோகப் ப த் தி ரி கைகள் எமது படைப்பாளிகளின் மென்னியைத் திருகிக்கொண்டே எமது பணத்தைச் சூறையிட்டன. இந்த அனியாயத்திற்கெல்லாம் தாய்நாடு, சேய்நாடு, க லே ப் பாலம், கலாச்சாரப் பரிவர்த்தனே, அரசியல் ந ா க ரீ கம் என்ற மூடு திரைகள் நன்கு பயன்பட்டன. அறிவுக்குத் தடையா என்று இப்போது புதிய குரல் எழுப்புகிறுர்கள் இந்த வேடதாரிகள். நடிகையின் காலே அடையாளம் காட்டுவதிலும், சென்னே நகரச்சாக்கடை ஏன் சுத்தஞ் செய்யப் படவில்லே என்பதிலும், சாயிபாபா பக்தைகளின் மேலாடைகளிலுமிருந்து என்ன அறிவுபெற முடிகின்றது என்பதனே இந்தப் பிரகிருதிகள் எமக்கு வி ள ங் க ப் படுத்த

வேண்டும். தரமான ஏடுகளை வருவிக்க சந்தா திட்டம் நல்ல மார்க்கமாகும். இன்னும் அரசாங்கமும், உள்ளூ ராட்சிமன்றங்களும், பாரிய நூல் நிலையங்களும் தென்னிந்தியாவில் மட்டுமல்ல உலகெங்கினுமுள்ள தரமான சஞ்சிகைகளை வருவித்து மக்கள் அதிக செலவின்றிப் படிக்க வசதி செய்யலாம். இதனையெல்லாஞ் சிந்தியாது தமிழ் வளர்ச்சிக்காக, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக இம்மியத்தனைதானும் ஏதுஞ் செய்யாது, பாராளுமன்றக் கதிரைகளுக்காக 'வசனம்' பேசுகிறவர்களால் எமது தேசிய இலக்கியம் வளர முடியாது. எழுத்தாளர்கள் வாழ்வு பெறமுடியாது. தமிழ் வளம் பெற முடியாது அவர்கள் அறிவுத்தடை என்று அலறுவதெல்லாம் தமது வேடங்கலைகிறதே என்றெரிச்சலினாலே தவிர, வேறெதனாலுமல்ல. எனவே அரசாங்கமும், அதுநியமித்துள்ள தமிழ் ஆலோசனைக் குழுவும் உடனடியாகத் தென்னிந்திய சஞ்சிகைகளின் வர்த்தக ரீதியான இறக்குமதியைத் தடைசெய்யும் வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என நாம் வற்புறுத்துகின்றோம்.

---

# நாவேந்தன்

## மாத ஏடென்றும் வாழியவே!

**கவிஞர் முருகசூரியன்**

### நேரிசை வெண்பா

நாவேந்த னனவுயர் நாவேந்தன் நற்பணியால்
"நாவேந்தன்" என்னுமெழில் நாமஞ்சேர்— மாவேந்தன்
என்ன வொளிர்மாத ஏடென்றும் வாழியவே!
வன்னவடி வேலனருள் வாய்த்து.

## ஸ்ரார் வாச் வேக்ஸ்

கைக்கடிகாரம், சுவர் மணிக்கூடு,
மேசை மணிக்கூடு
திருத்துவதற்கு

விஜயஞ் செய்யுங்கள்

23, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் கடமை

உள்நாட்டுக் கைத்தொழிலை ஆதரியுங்கள்

## வேலழகன் தொழிற்சாலை
## Velalagan Work Shop

கடைதல், வெல்டிங் செய்தல், இரும்பு
கேற், யன்னல்கள், பூட்டுகள் முதலியன
உற்பத்தி, விற்பனை செய்வோர்

காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

K. K. S. Road,
CHUNNAKAM.

# PRAGAS STORES

Dealers and manufacturers in all kinds of foot wears

No, 31-33, Kasturiar Road, JAFFNA.

அழகு மிளிரும்
நவீனப் பாதரட்சைகளுக்கு

## பிரகாஸ் ஸ்ரோர்ஸ்

31-33, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்

## மின்சார உப பொருட்கள்

**வட இலங்கை மின் ஒப்பந்தக்காரர்கள்**

சைக்கிள் உப பொருட்கள்,
பெற்ரோமாக்ஸ். குக்கர்,
மின் விசிறி, மூன்று சில்லுவண்டிகள்,
எஸ்லோன் தண்ணீர் குழாய்கள்,
பெரிய, சிறிய குடை வகைகள்
இவை யாவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

# எலக்ரோலக்ஸ்

பெரியதெரு, — சுன்னாகம்.

குறுநாவல்:

# தாயே வருக!

—சி. சண்முகவடிவேல்—

திரும்பிப் பார்க்கின்ற திசை எங்கும் மகழூர் செழிப்பாகக் காணப்படுவது என்னவோ உண்மைதான். நீர்வளம், நிலவளம், இயற்கை வளம் எதிலும் குறைவில்லை. வாழையும் பயிர்பச்சையுமாக வயல் வெளி பச்சைப் பசேலெனக் காட்சி தரும் தென்னந் தோப்பு ஒரு புறம். மாஞ்சோலை மறுபுறம். இயற்கையின் எழிலார்ந்த விதவிதமான வண்ணங்களைத் தாங்கி முகையவிழ மோகனச்சிரிப்போடு கவர்ந்திழுக்கும் மலர்த்தோட்டம். இத்தகைய சிறப்புக்களோடு அமைந்திருப்பதால் தானோ 'மகிழூர்' என்ற பெயருக்கு விளக்கம் கேட்டால், பார்ப்போரை மகிழ்விக்கும் ஊர் மகிழூர்' என்று சொல்லுவார்கள்.

அயலூரவர்களுக்கும் மகிழூரில் தனிப்பற்று-கொஞ்சம் பொருமை என்று கூடச் சொல்லலாம். பிறக்கில் மகிழூரில் பிறக்க வேணும். அங்கு பஞ்சம் ஏது? பசி ஏது? தேனும் பாலும் தெருவெங்கும் ஓடாவிட்டாலும் மகிழூர் வாசிகள் வயிற்றை நிரப்புகிறது" என்று உதாரணம் காட்டிப் பேசுவார்கள்.

யார் என்ன சொன்னாலும் – மகிழூரவர் மனங்கள் எந்த விடயத்திலும் ஒன்றுபட்டதே கிடையாது. ஒவ்வொருவர் மனத்திலும் தன்னையே எல்லோரும் பெரியவனுக மதிக்க வேண்டும் என்ற பூடகமான நினைவு. அதை வெளியே காட்டாது விட்டாலும் எல்லோரும் ஒன்று சேரும் வைபவங்களில் உள்ளார்த்தமான நினைவின் செயலாக ஏதாவது குத்தல் காரணங்களைக் காட்டி வைபவத்தில் கலக்காமல் குழப்பிக் கொண்டு போய்விடுவார்கள்.

மற்றுமொரு குறை. மகிழூரில் இருபத்தைந்து ஏக்கர் நிலப்பரப்புக் கொண்ட காணியின் பெயர் பனங்காணி. பெயருக்குப் பொருத்தமாக நெடும்பனைகளும் வடலிகளும் பனங்காணியில் தெட்டந்தெட்டமாகக் காட்சி தரும் பனங்காணியில் வசிப்பவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள். 'பள்ளர்கள்' என்று அவர்களை மேல்சாதியினர் சொல்லுவார்கள். தேனும் பாலும் பசி போக்கும் மகிழூரில் பஞ்சமும் பிணியும் பனங்காணியில் உலவும் மனித சீவன்களை ஆதரித்தது. பனங்காணியில் குடியிருப்போரின் குறைகளைத் தீர்த்து வைப்பவன் நோய் தேவன்.

பனங்காணியில் நடமாடுவோர் வாழ்க்கை சுவையானது. தலைமுறை தலைமுறையாக அவர்கள் தீண்டாச் சாதியாக விலக்கப்பட்டவர்கள். உயர் சாதியாரோடு அவர்களுக்கு உறவு இல்லை. ஆனால் மேலவர்களின் சுகவாழ்வுக்கும் உழைப்பு உறுஞ்சலுக்கும் பயன்படுத்தப் பட்டவர்கள். மேலானவரைத் தெருவில் பார்த்து விட்டால், தீண்டாச் சாதி, தோளில் சால்வை எடுத்து முதுகு வளைத்து, ''கமக்காரன்வர...'' என்று சொல்வது தான் ஒரு அரசன் போல என்ற நினைவை அவருக்கு ஏற்படுத்தும். அந்த மன நிறைவை அவரால் வேறு விதமாக அடைவது அருமை

மரமேறிகளின் நிரந்தர தொழில். கூலி வேலை, கள்ளிறக்குதல்... ஓரிருவர் கல்வி கற்று மாட்சிமை மிக்க அரசாங்கத்தில் ஆசிரியராகவும் எழுது வினைஞராகவும் பணிபுரிந்து வந்தார்கள். அவர்கள் வெளியூர்களில் கடமை புரிந்தார்கள். பனங்காணிக்கு வருவது ஆபூர்வம், வந்தாலும் ஒரு நாளுக்கு மேல் தங்க மாட்டார்கள். அவர்கள் சமூகத்தாரோடு உறவாடுவதை இழிவாகக் கருதினார்கள் போலும்

இயற்கை அன்னையின் உள்ளச் சுரப்பால் பனைகளில் தேறல் ஊறலுக்கும் குறைவு ஏற்படுவதில்லை. பனங்காணியில் வாழ்ந்த நூறு குடும்பங்களின் பானைகளிலும் கள்ளுக்குக் குறைவு

இருக்காது. ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் தண்ணீராகக் குடிப்பார்கள். காலை பத்து மணியிலிருந்து இரவு பத்து மணி வரை வரும் வாடிக்கையாளருக்காக ஒரு பகுதியை ஒதுக்கி வைத்துக்கொள்வார்கள். வைத்தியரைத் தேடி வரும் நோயாளியைப் போல கூட்டமாகவும் தனியாகவும் வந்துகொண்டிருப்பார்கள். பெண்களையும் குழந்தைகளையும் வயோதிப நோயாள ஆண்களையும் தவிர வேறு யாரும் வீடுகளில் இருக்கமாட்டார்கள்.

காலை பத்து மணிக்குக் கள்ளோடு ஆரம்பிக்கும் கதை இரவு பதினொரு மணி பன்னிரண்டு மணி வரை நிகழும். உலக விவகாரங்கள் அத்தனையும் அங்கு அலசி ஆராயப்படும். கொலை, களவு, அண்டிக்கெடுத்தலுக்குத் திட்டமிடுதலிலிருந்து அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி யார் என்ற கேள்விக்குறி வரையில் அலசி ஆராய்ந்து கொண்டு போவார்கள். தாய்நாட்டு அரசியல் அவர்களுக்கும் தண்ணீர் பட்டபாடு. ஒவ்வொரு பிரதிநிதியின் வரவு செலவுகள் ஆராயப்படும். தமிழர் சிங்களவர் முன்னேற்றம் தாழ்வு குறித்து விவாதிப்பார்கள். சில சமயங்களில் வாய்ச்சண்டை முற்றிக் கை பரிமாறல் வரையில் போய் விடுவார்கள்.

''வாழ்ந்தினம், ஆறுமுகநாவலர், சேர் பொன் இராமநாதன், அருணசலம் அவையள் மனிசர். அந்த நாளையிலை சண்டை நடந்து கொண்டிருக்கையிக்கையிலை இங்கிலாந்துக்குப் போய், மகாராணியோடை நேரில் பேசி, சிங்களவர், சோனகர் கலம்பகத்தை நிப்பாட்டி வந்தார், இராமநாதன் கொழும்புத் துறைமுகத்திலை இருந்து தேரிலை இருத்தி இராமநாதனை ஊர்வலமாக அழைச்சு வந்தினம். அதுவும் சிங்களவர். அந்த மரியாதையை எல்லாம் பழுதாக்கிப் போட்டான்கள். ஐம்பத்தாறிலை விழுந்த அடியையும் மறந்து போனன்கள் காணும், ரோசங்கெட்ட தமிழன்...''

''அறிவு கெட்ட கதை பேசாதை. தமிழன் உலகத்திலை அடங்கலும் சீவிக்

கிறுன், பார்! சிங்களர் இலங்கையிலே மாத்திரம் தான் இருக்கினம். அதினலே இலங்கையை அவையள் தங்களுக்குச் சொந்தமாக்கப் பாக்கினம். அதனலே தானே பாரதியும் சிங்களத் தீவினுக்கோர் பாலம் கட்டுவோம் என்டு பாட்டுப் பாடினன்.'' என்ருர் புளாக்காரன்.

''உதிலே தான் மணியண்ணை பிழை விடுருய். இலங்கைத் தமிழனும் ஞாயமான காலம் சீவிச்சு வாருன். ராவணன் தமிழன். அவன்ரைகாலத்திலேஇருந்து தமிழன் இருக்கிருன் தானே?'' என்ருர் மூன்ரும் பேர்வழி.

இவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு வந்த நாலாம் பேர்வழி தன் கருத்தைக் கட்டவிழ்த்து விட்டுக் கொண்டே வந்தார்!'' வெள்ளைக்காறன் தமிழன்ரை நல்லதெல்லாம் மறைச்சுப் போட்டு, வேண்டாததெல்லாத்தையும் குடுத்துட்டுப் போயிருக்கிருன். உதுகளைப் பேசி வாய் அலுக்கிறத்தை விட உந்தக் குடிகாரன்ரை பேச்சை விட்டிட்டு இஞ்சை வார் கதிராசி''.

கதிரன் மூலையில் முடங்கிக் கிடந்தான். அவன் ஒரு மாதமாக வெளிநடப்புத் தெரியாமல் குடிசையில் முடங்கிக் கிடந்தான் முடக்கு வாதம் அவனை முறித்துப் போட்டுவிட்டது. ஒரு மாத இடைவெளியில் எத்தனையோ ரகசியத் திட்டங்கள் அம்பலத்துக்கு வந்துவிட்டன. நடைமுறையில் செயல் படுத்துவதற்கான ஏற்பாடுகளும் நிகழ்ந்து வருவதைக் கேட்க அவனுக்கு ஆச்சரியமாகவும், ஆவலாகவும் இருந்தது. இப்பொழுதெல்லாம் கள் குடிக் கதையில் உலக விவகாரங்கள் அடிபடுவதே இல்லை. மகிழூரைப் பற்றிய விசயங்களையே மாறி மாறிப் பேசினர்கள். இந்தத் தடவை தனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவ கொடியேற்ற தினத்தில் ஆலயப் பிரவேசம்!

கதிரன் காதில் தேனகப் பாய்கிறது! 'ஆலயப் பிரவேசம்' ஆண்டவன் எங்களை விலக்கி வைக்கவில்லை. உல

கத்துக்குத் தாயாகிய தனேசுவரி அம்பிகையே! நீ மறந்தாலும் நாங்கள் உன்னை மறக்கமாட்டோம்! உன் அலங்கார கோலத்தை அருகில் நின்று கண் குளிரக் காணும் பாக்கியம் தா! 'கதிரன் மெய்மறந்து கண்களை மூடுகிறான். அவன் கண்களிலிருந்து இரு துளி கண்ணீர் அவன் வற்றி உலர்ந்த கன்னங்களில் வழிகிறது.

ஒரு மாத காலமும் பனங்காணி திமிலோகப் பட்டு வருகிறது. நாள் ஒரு கூட்டமும் ஊர்வலமுமாகச் சனத்தைத் திரட்டுகிறார்கள். கதிரனால் கூட்டங்களிலோ ஊர்வலங்களிலோ கலந்து ஆலயப்பிரவேசகாரரை ஊக்குவித்து, தன் சமூகத்தின் அந்தஸ்தை உயர்த்தப் பாடுபட இயலாமல் போனது வருத்தம் தான். படுக்கையில் இருந்தபடியே கூட்டங்களில் நிகழும் சொற்பொழிவை, வீராவேசமான பேச்சை, கனல்கக்கும் முகத்தை ஒலிபரப்பியின் உதவியால் காதுகொடுத்துக் கேட்டிருக்கிறான்.

கதிரன் திரும்பவும் ஒரு தரம் பேச்சின் கருத்தை நினைத்துப் பார்க்கிறான்.

''தாழ்த்தப்பட்ட சமூகமே! விழித்தெழுங்கள். தீண்டாத சாதியாக வாழ்வதை விடச் செத்து மடிவது, மேல்! ஆலயத்துள் செல்ல. ஆண்டவனைத் தரிசிக்க நாம் அருகதை அற்றவர்களா? ஐம்பெரும் பூதங்களால் ஆக்கப்பட்ட சரீரம் ஐம்பெரும் பூதங்களோடு சேர்ந்துகொள்கிறது. நாம் தீண்டாச் சாதியாக விலகி வைத்திருக்கும் '..... ......' இவர்களால் நாம் இறந்த பின்பு எமது சரீரம் ஐம்பூதச் சேர்க்கையிலிருந்து தடுத்து விட முடியுமா? எமது மூதாதையர் பழி பாவங்களால் பயமுறுத்தப்பட்டார்கள். அதற்காக நாமும் மனித உரிமைகளை இழந்து வாழ்வதை விரும்புகிறீர்களா? இல்லையென்றால் ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக அணி அணியாகத் திரளுங்கள்...! அம்பிகையின் உற்சவ தினத்தில் உரிமைகளைப் பெறுவோம்...''

கதிரன் குடும்பத்தினர் மூன்று தலை முறையாகப் பனங்காணியில் வாழ்ந்து வருகிறார்கள். பணமில்லாவிட்டாலும் படிப்பு இல்லா

விட்டாலும் அந்தக் குடும் பத்தினருக்குப் பனங்காணி யில் வாழும் குடும்பத்தினர் ஆலோசனை கேட்கத் தவறு வதில்லை. கதிரன் சொல்லுக் கும் பனங்காணியில் மதிப் பிலிருந்து வந்தது. அவன் கருத்துக்களை ஏற்காவிட்டா லும் ஆலோசனைகள் கேட் கத் தவறுவதில்லை. ஆலயத் துள் செல்லும் கூட்டமும் தங்கள் திட்டத்தை விரி வாக்க முன்னர் கதிரனைக் கண்டு பேசினுர்கள். அவன் தன் பூரண சம்மதத்தைக் கொடுத்தான்.

''தமிழனாய் பிறந்து விட்டோம். பரம்பரை பரம் பரையாகச் சைவத்திலையும் இருந்து வாறம். எங்கட குடும்பங்களை பசியாலையோ தொழில் வசதியாலையோ சமயம் மாத்த முடிய இல்லை. அந்த வைராக்கி யத்தை நெடுகச் சோதிக்க முடியாது. வெளிநாட்டார் செய்த மதம்மாத்து வேலை யை இப்ப உள்நாட்டாரே செய்து வருகினம். இதைச் சைவக்காரர் உணரினம் இல்லை... கோயிலுக்குள்ளை போறதைத் தடுக்கிறது இன்னும் கன காலத்துக்கு இல்லை... படிப்படியாக பறிக்கப்பட்ட உரிமையைப் பெற்றுவறம் அந்தநாளைக் கோயில் வழிபாட்டிலும் பாத்துக் கொண்டிருந்தால் அந்தத் தாமதத்திலை முழுப் பேரும் சமயம் மாறிவிடு வினம் அதுக்கு முந்தி நாங்களாகவே எங்கடை ஆக்களைச் சமயத்திலை உற் சாகப்படுத்த வேணும்......''

வந்திருந்தவர்களில் ஒருவர் கதிரன் பேச்சைக் கேட்டு ஆவேசமடைந்தார். உடம்பு படபடக்க, அவசரத் தில் சொற்கள் குழம்பச் சொன்னுர்!.

''நீங்கள் சொல்லுவ தைப் பார்த்தால் ஆலயப் பிரவேசம் உரிமைப்போ ராட்டம் கடவுள் வழிபாட் டுக்கு இடமில்லை......''?

''பாதிக்குப் பாதி கட வுள் வழிபாட்டுக்கும் கோ யிலுக்குள்ளை போறதுக்கும் சம்பந்தமில்லை. அண்டசரா சரங்களையும் ஆட்டிப் படைக்கும் தேவாதிதேவனை நாலுபக்கச் சுவருக்குள்ளை அடக்கி வைக்கிறது மன வியாகூலம்.''

கொட்டிலில் வட்டமா கக்கூடியிருக்கிறுர்கள். எல் லோரும் மகிழூரில் வாழும் உயர்சாதியார். ஒவ்வொரு

வருக்கும் முன்னுல் வடலி ஒலேயில் கோலிய பாதிப் புளாவில் பனம்பால் நுரைக் கிறது. அவர்கள் உரையா டலில் காரசாரமாக மகிழூர் தனேஸ்வரி அம்பாள் ஆலய நுழைவு விவாதிக்கப்படு கிறது. அவர்கள் உரையா டலேப் படுத்திருந்து கதிர ஞல் கேட்கப் பொறுக்க வில்லே. மெல்ல எழுந்து ஊன்றுகோலின் உதவி யோடு தட்டுத் தடுமாறி நடந்து வந்து கலந்து கொண்டான்.

''பள்ளர் பள்ளர்தான். அவன்களுக்குக் கோயில் என்ன? குளம் என்ன? விரும்பினுல் வெளிவீதியிலே நின்று கும்பிடட்டும்'' என் ருர் முதலாம் ஆள், வாயில் புளாவை வைத்துக் கொண்டு. அவர் பேச்சுக் குச் சரியான பதிலடி கொடுக்கக் கதிரன் மனம் துடித்தது. பொறுமையா சுச் சமாளித்துப் பேசா திருந்தான்.

''அந்த விதமாகச் சொல்லப்படாது பெரி யண்ணே. அவன்களும் மனி சர்தானே. அவர்களுக்கும் சுவாமியோட அழைஞ்சு பழக விருப்பம் இருந்தால் தங்களுக்கென ஒரு கோயி லேக்கட்டிக் கும்பிடட்டும். ஏன் வெள்ளாஞ் சாதியின்ரை கோயிலுக்குள்ளே நுழைய அவசரப்படுருன் கள். நாங்கள் ஐயர் போற ஆதி மூலம்வரை போகப் போறம் எண்டு கேக்கஇல்லே. அவன் அவனுக்கு வகுத்த அளவோட நிண்டு கொள்ள வேணும்...'' என்ருர் இரண் டாம் ஆள். அவர் ஒரே மூச்சில் புளாவிலிருந்த கள்ளே இழுத்துத் தள்ளி விட்டுக் கூடியிருந்தவர்களே நிமிர்ந்து பார்த்தார். ''அந் தக் குடிகாரன் எப்பொழு தும் ஒரே மாதிரியாகப் புசத்திக்கொள்ளுவான்" என்பது போல ஏனேயோர் இரண்டாம் ஆளே ஏளன மாகப் பார்த்தார்கள்.

அவன் பேச்சை ஒரு வரும் சட்டை செய்வதில்லே. ஆனுல் அவன் சொல்லு வதற்கு மறுப்புக் கூறமாட் டார்கள். அவனுக்கு இருந் தாற் போல் திடீர் கோபம் வந்துவிடும். ஆத்திரத்தில் கோபத்துக்காளாக இருந் தவனேக் கண் மண் தெரி யாமல் விளாசிவிடுவான். அவன் சுபாவம் ஊர் அறிந்த உண்மை. இந்தப்

பரந்த பூவுலகில் அவனுக்கு என நித்தம் கடமை இருக்குமாக இருந்தால் அது நாள் தவருமல் மது போதையில் மயங்குவது தான். அவனுக்கு வீட்டில் மனைவி இருக்கிருள். இரண்டு குழந்தைகள் இருக்கிருர்கள். அவன் தன் குடும்பத்தைச் சட்டை செய்யமாட்டான். இரவு பத்து மணிக்கு மேலாக வீடு போய்ச் சேர்வான். சில நாட்களில் பத்து மணிக்கு மேலாக மனைவியோடு சண்டை போட்டு வாய்க்கு வந்தவாறு ஏசுவான். சில தினங்களில் மனைவியை உதைத்து வீட்டை விட்டு வெளியேற்றுவான். அவள் விடிகிறவரையில் தெருவோரத்தில் குந்தியிருந்து அழுது கொண்டே இரும்பாள். இரவில் அமர்க்களம் நடந்தாலும் நடவாது விட்டாலும் விடிந்து பத்து மணியாளுல் அவனை வீட்டில் பார்க்க முடியாது. அவன் மனைவி மக்கள் வயிறு நிறையச் சாப்பிட்டார்களா? கந்தை இல்லாத துணி அணிகிருர்களா? எதுவும் அவன் அறியான். அவனுக்கு சண்டைக்கு யாரும் கிடைத்துவிட்டால் அவர்களை விட்டுவிட்மாட்டான். அவன் குணம் தெரிந்து கொண்ட எவரும் அவனுடன் வலிய முட்டிக்கொள்ள மாட்டார்கள். அவன் தானுக வலிந்து வந்தாலும் ஒதுங்கிக் கொள்ளவே வழி தேடுவார்கள். அவன் தன் பேச்சுக்கு ஒருவரும் மறுப்புத் தெரிவிக்கவில்லை என்று அறிந்து மகிழ்ச்சி அடைந்தான். தான் சொல்லும் நியாயத்தை நாலு பேர் ஏற்றுக்கொள்ளுவதாக நினைப்பதில் பரம திருப்தி.

காற்று லேசாக வீசியது. காவோலை பனையோடு உராய்வதால் சலசலத்த சத்தம் ஏற்பட்டது சத்தம் இன்னதென்று தெரிந்து கொள்ளாமல் யாரோ வருகிருர்களோ... என்று ஐயுற்று கதிரன் கலக்கமடைந்தான். அவன் உடம்பு புல்லரித்து மயிர்க்கால்கள் குத்திட்டன. ஒரு வாரமாகக் கூட்டங் கூட்டமாக கோயிலுக்குள் நுழையும் இயக்கக் கூட்டத்தினர் பனங்காணியில் உள்ள எல்லாக்குடியிருப்புக் குடிசைகளுக்குப் மறைமுகமாக உலவி வருகிருர்கள். ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக ஒவ்வொரு குடிசையினரும்

என்ன பேசிக்கொள்கிறார்கள் என்று தெரிந்துவருகிறார்கள். கட்குடிக்க வருவோர் மது மயக்கத்தில் வாய் தடுமாறிப் பேசும் உணர்ச்சி வார்த்தைகள் அவர்கள காதுகளில் விழுந்தால்.? எல்லோரும் சுதிரன் போல உணர்ச்சியைக் கட்டுப்படுத்துபவர்களாயும் பொறுமைசாலிகளாகவும் இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா?

இது போலத் தான். நான்கு நாட்களுக்கு முன்னுக... கோயில் நுழைவு இயக்கத்தினர் மறைவாக ஒட்டுக் கேட்டு வரும் போது ஒரு கொட்டிலில் கூடியிருந்தவர்கள்.. ஆலயப் பிரவேசத்தை எதிர்த்து வாதிட்டுக் கொண்டிருந்தார்கள். கள்ளு விற்கும் நல்லானும் அவர்களுக்குச் சாதகமாக: ஓம் கமக்காரன்! நாம் சொல்வது சரியாக்கும்.அந்த அந்தக் குலத்துக்கு விதிச்ச சாதிக் கட்டுப்பாட்டிலை இருந்து தவறக் கூடாது என்ர அப்பன் என்ன மாதிரி நடந்து காட்டிச் சுதோ அது மாதிரித் தான் நான் நடக்க வேணுமாக்கும்... இந்தக் காலத்து மீசைவிட்ட கடுக் கண்டதுகள் எல்லாத்தையும் குழப்பி அடிச்சு வெள்ளாளருக்குச் சமன் எண்டா நடக்குமேயாக்கும்...! தான் தன் தன்ற சாதி குல ஒழுக்கத்தோட இருக்கிறது அல்லோ தனக்குச் சிறப்பு. அதை விட்டிட்டு வெள்ளாச் சாதிக்கு நான் என்ன குறையோ எண்டு கோயிலுக்குள்ளே நுழையப் போறன் எண்டா...

நல்லான் சொன்னது தான் தாமதம் கூடியிருந்த கூட்டம் நல்லானைப் பாராட்டியது. "உண்மையான சாதிப்பள்ளன் நல்லான் தான். அவன் குல ஒழுக்கம் அவனோட..." என்று கூறி முடிக்கவில்லை, கொட்டிலுக்கருகில் வந்து விழுந்தது சிறு பொட்டலம்... ஒரு கணம் ஓடிச் சிலிர்த்தது மறுகணம் காது செவிடு படும்படி பெரும் ஓசையுடன் வெடித்தது. தெய்வாதீனமாகக் கூடியிருந்தவர்கள் ஒருவருக்கும் காயம் ஏற்பட வில்லை ஆனல் அவர்கள் எந்தப் பக்கமாக ஓடி மறைந்தார்களோ... ஆச்சரியம் தான். அன்றிலிருந்து நல்லானைக் காண

வில்லை. நல்லானுடைய கள்ளுக் கொட்டிலும் குடிசையும் அன்றிரவு தீ வைக்கப்பட்டது. அன்றிலிருந்து பனங்காணிக்குள் கள்ளுக்கு வருபவர்கள் குறையத் தொடங்கியது. வருபவர்களும் தாம் வந்த விடயத்தில் கண்ணுங்கருத்துமாக இருந்து 'அலுவலைப்' பார்த்து விட்டுப் போனார்கள். விற்பவர்கள் கூடத் தம்மால் இயன்ற மட்டும் கள் இல்லாததைச் சொன்னார்கள். தோலுணியாகப் போக மறுத்தவர் களுக்கு மாத்திரம்...! ஊற்றினார்கள்.

மற்றைய கொட்டில்களுக்குப் போகச் சங்கடப்பட்டவர்கள் எல்லாம் கதிரன் கொட்டிலுக்குத் தைரியமாக வந்தார்கள். கதிரன் முன்னிலையில் தமக்கு எந்த வித இடையூறும் நடவாது என்ற நம்பிக்கை அவர்களுக்கு. ஆனல் வந்தவர்கள் வந்த '...' அலுவலைப் பார்த்து விட்டுப் போகும் வரையில் கதிரன் உள்ளூறப் பயந்து கொண்டே இருப்பான். அவன் முகத்துக்கு என்ன தான் மதிப்பு இருந்தாலும்... பனங்காணி ஒன்று பட்டுக் கொந்தளித்துக் கொண்டிருக்கையில் அவனை மதிக்க யார் இருக்கிறார்கள்.! கேட்ட சலசலப்பும் காவோலை தான் என்று நிச்சயப்படுத்திக் கொள்ளும் வரையில் அவன் இருதயத் துடிப்பின் வேகம் தணியவில்லை. பொறுமை இழந்த கதிரன் அவர்களைப் பார்த்துப் படபடப் போடு சொன்னான். "கொஞ்ச நாளைக்கு நீங்கள் வராமல் இருக்கிறது தான் நல்லது ஊர் ஒன்றுபட்டு நிக்கை யிக்கை நான் தனிச்சு நின்று தாக்குப் பிடிக் இயலாது..."

கதிரன் சொன்ன ஒவ்வொரு சொல்லும் கூடியிருந்தவர்கள் முகத்தில் அறைந்தது போல உணர்ந்தார்கள். ஈட்டியால் தாக்கியது போன்ற உணர்வுக்கு ஆளானார்கள் இவ்வளவு நாட்களாக ஏற்படாத ரோசம்... மானம் கப்பலேறுவது போன்ற அவமானம்...! எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்க்க அஞ்சிப் பார்வையைத் தாழ்த்திக் கொண்டார்கள். மௌனமாக ஒருவர் பின் ஒருவராகக் கொட்டிலை விட்டு வெளியேறினார்கள்! கதிரன் எதிர்பார்ப்பதற்கு மாறாக அவர்கள் வாயிலிருந்து ஒரு சொல்லாவது வெளிவரவில்லை.

—(வளரும்)

சிறு கதை

# திரை மறைவினிலே..........!

''கிணறு காவி''

கையிலிருந்த ''சூட்கேசை'' கதவு நிலையோடு சாத்தி வைத்து விட்டு மீண்டு மொருமுறை ''நம்பரை'' சரி பார்த்துக் கொண்டு கதவைத் தட்டினேன். நீண்ட நேரமாக யாரும் வந்து கதவைத் திறந்தபாடில்லை. உள்ளே என்ன நடக்கின்றது என்பதை அறியமுடியாத படி கண்ணாடி யன்னல்கள் துணிகளினால் மூடப்பட்டு இருந்தன. கடைசி முறை என்று நினைத்துக் கொண்டு கதவை மீண்டும் தட்டினேன். உள்ளே இருந்து பூட்டு திறக்கும் சத்தமும், அதைத் தொடர்ந்து கதவும் திறபட்டது.

''வீட்டை ஒருமாதிரி பிடித்து எப்படியும் நீ வந்து விடுவாய் என்று எனக்குத் தெரியும். அவருக்கு நேரமில்லை அதுதான்'' ஸ்ரேசனுக்கு வரவில்லை'' என்று மிகவும் வடிவாக மச்சாள் பேசினா'' ரோட்டோரம் கள்ளர் பயம் அதுதான் கதவை எந்தநேரமும் பூட்டி வைக்கிறது என்று, நான் கேட்காமலேயே காரணமும் சொன்னா. ''பெட்டியை உள்ளுக்கு கொண்டு வந்து வை நான் தேத்தண்ணி ஊத்திக் கொண்டு வாறன்'' என்று சொல்லி விட்டு மச்சாள் உள்ளே சென்று விட்டா. நானும் பெட்டியை உள்ளே கொண்டு வந்து வைத்து விட்டு முன் அறையிலே இருந்த சோபாவிலே அமர்ந்து கொண்டேன்.

சுவாமி விவேகானந்தரின் படம் ஒன்று எனக்கு நேரேயிருந்த சுவரில் அழகாக மாட்டப்பட்டிருந்தது. ''மற்றவர்களுக்காக வாழுகிறவர்களே வாழுகின்றவர்கள் மற்றவர்கள் வாழ்ந்தும் செத்தவர்களுக்கு சமம்'' என்ற அவரது பொன் மொழியும் ஆங்கிலத்தில் படத்தின் கீழ் பொறிக்கப் பட்டிருந்தது.

''தண்ணியைக் குடித்து விட்டு பிரயாணக் களைப்புத் தீர குளித்து விட்டு வா அதற்கிடையில் நான் புட்டு அவித்து விட்டு ஏதாவது பொரித்தும் விடுவேன்'' என்று மச்சாள் தேனீரை கையில் தந்தபடியே சொன்னா.

வாழ்க்கையில் இல்லாமை ''என்றால் என்ன என்று தெரியாமல் மச்சாளுடைய வாழ்க்கை அமைந்து விட்டது. அண்ணர் எப்படியோ படித்து ஒரு ''சிவில் சேவன்ற்'' ஆகியிருந்தார். தானுண்டு தன் வேலையுண்டு என்று வாழ்ந்த அவருக்கு சந்ததி இல்லை என்ற கவலையைத் தவிர வேறு ஒரு கவலையும் இல்லை சாமியும் கோவிலும் தானுமாக வாழ்க்கை ஓடியது. கதவை யாரோ தட்டினார்கள். நான் கதவை திறந்தேன். அண்ணர் கையில் காய்கறிப் பையோடு உள்ளே வந்தார். என்னைக் கண்டதும் ஒரு சிரிப்பு'' நானும் பதிலுக்குச் சிரித்தேன். காய்கறிப் பையை மச்சாளிடம் கொடுத்து விட்டு என்னிடம் வந்து எனது படிப்பைப் பற்றிக் கேட்டார். கொழும்புக்கு இப்போது எதற்காக வந்தாய் என்றும் கேட்டார். எல்லாவற்றையும் ஏதோ ஒப்புக்கு கேட்பது போல் கேட்டுவிட்டு வந்த வழியைப் பார்த்துப் போனார். அவர் போனதும் கதவு பூட்டப்பட்டது.

நான் உடுப்புக்களை களைந்து ஒரு துண்டைக் கட்டிக் கொண்டு பாத்ரூமுக்குள் போனேன். மச்சாள் ''சோப்பும் துவாயும் இதிலை வைத்திருக்கிறேன் எடுத்துக் கொள்'' என்று குசினியிலிருந்தபடியே சொன்னார். குளித்துக் கொண்டு இருக்கும் பொழுது வந்து கொழும்புத் தண்ணீர் குளிராகவிருக்கும் என்று சொல்லிவிட்டு ''சவர்'' பாதை திறந்து விட்டார். அண்ணரை விட மச்சாள் அதிகமாகவே அன்பு பாராட்டினா. நான் சுவாமி விவேகானந்தரின் ''மற்றவருக்காக வாழுகின்றவர்களே வாழுகின்றார்கள்'' என்ற பொன் மொழியை நினைத்துப் பார்த்துக் கொண்டேன்.

குளித்து விட்டு வரும்

பொழுது குசினியைப் பார்த்தேன் எவர் சில்வர் பாத்திரங்களும் பித்தளைப் பாத்திரங்களுமாக அழகாக அடுக்கி வைக்கப்பட்டு இருந்தன. நான் வாசலிலே நின்று பார்த்ததைக் கவனித்து விட்டு உள்ளே வந்து வடிவாய்ப்பார் 'என்று மச்சாள் சொன்னு மண் அடுப்பு அதை அடுத்து குக்கர் அடுப்பும் இருந்தது அந்த குசினியே இப்படி பழமையும் புதுமையும் கலந்தே இருந்தது. ஒரு நவீன சமயலறைக்கு வேண்டிய அத்தனை அடுக்குகளும் இருந்தன ''சாமியைக் கும்பிட்டு விட்டு வந்து சாப்பிடு என்ற மச்சாளின் கட்டளையைத் தொடர்ந்து சாமி அறையைத் தேடிப் பிடித்து திருநீற்றை எடுத்து நெற்றி நிறையப் பூசிக் கொண்டேன். அந்த அறையிலே இருந்த சாமியார் கூட சகல நவீன வசதிகளோடே வீற்றிருந்தார்'' நாட்டிலே ஏன் வறுமை இருக்காது?

சாப்பாட்டு மேசையிலே இருந்தேன். மச்சாள் அருகே நின்று சாப்பிடுவதை கவனித்துக் கொண்டிருந்தா. நெற்றியிலே வந்து விழுந்த எனது தலைமுடியை எடுத்து மேலே விட்டுக் கொண்டேன்'! கொண்ணரை விட நீ வடிவு என்று மச்சாள் சொன்னதும் எனக்கு வெட்கமாகப் போயவிட்டது ''பிட்டைச் சாப்பிட்டு முடிந்ததும் பாணிலும் சாப்பிடு'' என்று சொல்லிவிட்டு பாணை வெட்டி பட்டரை பாணிலே பூசினு ''பட்டர்'' பூசினுன்' என்று எனது நண்பன் அருச்சுனன் அடிக்கடி சொல்வதை நினைத்துச் சிரித்துக் கொண்டேன். இப்பொழுது மச்சாள் எனக்கு மிகவும் அருகில் நின்று கொண்டிருந்தா. ஒரு கிழமைக்கு நின்று விட்டு போங்கோ என்று என்னுடைய தோளைத்தொட்டுசொன்னு.

கதவை யாரோ தட்டினுர்கள். மச்சாள் போய் கதவைத் திறந்தா. ஒருவர் உள்ளே வந்து அறையை நோக்கிப் போனுர். எனக்கு அவரை எங்கேயோ பார்த்தமாதிரி இருந்தது. அவர் போன திசையை வடிவாகப் பார்த்தேன்.

உவரை உனக்குத் தெரியுமே எங்களின்ரை ஊரவர். இலங்கை றெயில்

வேயிலே'' வேலே செய்கின்ருர். இந்த அறையிலே தான் இருக்கிறவர். இப்ப அவருக்கு ''ஒப்'' ''இனி நயிட்டியூட்டி'' யாக்கும் ''என்று மச்சாள் அந்த'' அவரைப்பற்றி ஒரு பிரசங்கமே செய்து விட்டா.

அண்ணர் பகல் சாப்பாட்டிற்கு வருவார் சாப்பிடுவார் போய்விடுவார். மாலேயிலே அண்ணர் வீட்டுக்கு வருகின்ற நேரத்தில் றெயில் வேயில் வேலே செய்பவர் போய் விடுவார்.

தினங்கள் ஒன்று இரண்டு மூன்று என்று போய்க்கொண்டேயிருந்தன. மச்சாள் எனக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் உடனுக்குடன் கவனித்து செய்து தந்தா.

ஒரு இரண்டும் கெட்டான் நேரம் பகல் மூன்று மணி இருக்கும் றெயில்வேக்காரனும் வீட்டிலில்லே. நான் சாப்பிட்டு விட்டு கட்டிலிலே படுத்திருந்தேன். மச்சான் அறையிலே ஏதோ செய்து கொண்டிருந்தா. சிறிது நேரத்தில் அறைக்கு வெளியே வந்து வாசலில் நின்று என்னேப் பார்த்தா. நானும் பார்த்தேன். மச்சாள் வடிவு, நெடுநேரமாகப் பார்த்தா நானும் நெடு நேரமாகப் பார்த்தேன். படுக்கையை விட்டு எழுந்தேன்..............

கதவு தட்டிக் கேட்டது.

மச்சாள் போய் கதவைத் திறந்தா அண்ணர் தான் வந்திருந்தார். ''ஏன் இன்றைக்கு வெள்ளனவோடை'' என்று கேட்டுவிட்டு நீங்கள் வந்து இப்படி இடை நேரத்திலே கதவைத் தட்டிறது எனக்கு வந்து திறக்கக் கூடப் பயம். ஆமேரன் காவாலி களிசறையள் கூட வந்து தட்டும், என்று சிறிது கோபமாகவே அண்ணருடன் பேசினு.

அன்றைய பொழுது அப்படியே போனது.

பிள்ளேயில்லே என்ற குறை அண்ணரை வாட்டியது போலே மச்சாளேயும் வாட்டவே செய்தது. மச்சாள் நேராத சாமியில்லே. போகாத கோயிலில்லே. குழந்தைச் செல்வத்தை அடைவதற்கு நெருப்பைத் தின்னக்கூட ஆயத்தமாக விருந்தா. துருவி, துருவிப் பார்த்தால் கூட குழந்தையில்லே எனபதைத் தவிர

## வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பக வெளியீடுகள்

| | | ரூ. ச. |
|---|---|---|
| தமிழ்மொழிப் பாடப் பயிற்சி க. பொ. த (சாதாரணம்) | | 3—00 |
| Test Papers in English G. C. E (Ord Level) | | 3—00 |
| சுகாதாரவியல் வினாவிடை க. பொ. த. (சாதாரணம்) | | 1—50 |
| 5ஆம் வகுப்பு [3ஆம் பருவம்] | தமிழ்மொழிப் பயிற்சிகள் | 85 |
| | எண்கணிதப் பயிற்சிகள் ... | 75 |
| | சூழற் பயிற்சிகள் ... | 75 |
| | ஆங்கிலப் பயிற்சிகள் ... | 75 |
| 6ஆம் வகுப்பு (3ஆம் பருவம்) | தமிழ்மொழி, இலக்கியப் பயிற்சிகள் ... | 95 |
| | கணிதப் பயிற்சிகள் ... | 80 |
| | ஆங்கிலப் பயிற்சிகள் ... | 90 |
| | புவியியற் பயிற்சிகள் ... | 90 |
| | சரித்திரப் பயிற்சிகள் ... | 75 |
| | பொதுவிஞ்ஞானப் பயிற்சிகள் ... | 80 |
| 7ஆம் வகுப்பு (3ஆம் பருவம்) | தமிழ்மொழி, இலக்கியப் பயிற்சிகள் ... | 95 |
| | கணிதப் பயிற்சிகள் ... | 80 |
| | ஆங்கிலப் பயிற்சிகள் ... | 85 |
| | புவியியற் பயிற்சிகள் ... | 70 |
| | சரித்திரப் பயிற்சிகள் ... | 80 |
| | பொதுவிஞ்ஞானப் பயிற்சிகள் ... | 85 |

**தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம்**



**படித்தீர்களா!**

## கலைக் கதிர்

(விஞ்ஞான மாத இதழ்)

ஆசிரியர், மாணவர்களுக்குத் தேவையான உளவியல்-பொதுவியல் - அறிவியல் - விண்ணியல் - இலக்கியம் -

**வரலாறுகள் கதை, கட்டுரைகள்**

**இன்னும் பல அரிய விடயங்களுடன் வெளி வரும்**

சிறந்த மாத இதழ்.

**இலங்கை சோல் ஏஜன்ட்:-**

### தமிழ்ப்பண்ணை புத்தக நிலையம்

193, K. K. S. ரோட்
19, பஸ் நிலையம் } **யாழ்ப்பாணம்.**

**தொலைபேசி. 7167**

வேறு என்ன குறையுமில்லை.

நான் நாளைக்கு யாழ்ப் பாணம் போகிறேன் என்று மச்சாளிடம் சொன்னேன். மச்சாள் இன்னும் இரண் டொரு நாட்களுக்கு நிற்க லாமே? என்று கேட்க அண் ணர் கூட முதல் நாள் சொன்னார். ஏன் இங்கு வந்து நெடுக நிற்கிறாய்? படிப்பு கெட்டுப் போகும். நாளைக்கு வெளிக்கிடு நான் கூட்டிக்கொண்டு போய் றெயில் ஏத்திவிடுகிறேன். என்று கூட்ட வர நேரமில் லாத அண்ணருக்கு இப்போ அனுப்பி வைக்க நேரமிருந் தது- நானும் என்னுடைய எட்டாம் வகுப்புச் சோதனை யை நினைத்துக் கொண்டு புறப்பட ஆயத்தமானேன்.

யாழ்ப்பாணம் கொண்டு போவதற்கு அன் னுசிப் பழம் வாங்கி வரும் படி மச்சாள் காசு தந்து அனுப்பினு. றெயில்வேகார னின் அறையிலிருந்த ஒரு பாய்க்கையும் எடுத்துக் கொண்டு நடையைக் கட்டி னேன். அன்னுசிப்பழக்கார னுக்கு காசு கொடுக்கப் பார்த்த பொழுது. காசைக் காணவில்லை. பாக் எடுத்த பொழுது றெயில்வேக்கார னின் அறையிலிருந்த மேசை யில் காசை வைத்த ஞாப கம் வந்தது. மறுபடியும் ஓட்டமும் நடையுமாக வந்து சேர்ந்தேன் கத வைத் தட்டினுல் இரண்டும் கெட்டான் நேரத்தில் வந்து கதவைத் தட்டியதற்கு அண்ணர் வாங்கிய பேச்சு ஞாபகத்திற்கு வந்தது. கத வைத் தட்டாமல் பின் பக்க கதவு வழியாக செல் லுவோம் என எண்ணி கம் பிக்கேற்று வழியாக ஏறிக் குதித்து உள்ளே வந்து மச் சாளைப் பார்த்தேன். காண வில்லை. காசை எடுத்துக் கொண்டு போவோம் என்று றெயில் வேக்காரனுடைய அறைக்குள் போனேன். றெயில்வேக்காரனும் மச்சா ளும் கட்டிலில் இருந்தார் கள். நான் காசை எடுத்துக் கொண்டு அன்னுசிப்பழக் காரனிடம் ஓடினேன்.

(யாவும் கற்பனை)

# நாளிதழின் ஓரேடு!

— சுதந்திரராஜா —

பெரிய மனிதர் செல்வத் துரையராம்·
செத்துப் போனாராதலால் கேட்கிறது ஒப்பாரி,
சொத்துப் பத்துச் சீமான்கள் கார்வரிசை யோவெனில்
வீதிப் போக்கு வரத்தைத் தடுக்கிறது,
இறங்கிச் சயிக்கிளை உருட்டிச் சென்றேன்,
வீட்டு வாசல் ஊடுதெரிந்தது பிணபிம்பம்,
சுற்றியுள்ள எதிர்காலப் பிணங்களெல்லாம்
போடுகின்ற பிலாக்கணத்தில் தொனிப்பதுவோ
பணவிம்பம்;

கட்டுகின்றான் பாடையே சரிகைப் பட்டோடு
சூம்புவதோ குத்தி விட்ட தென்னம்பாளை,
சுருட்டுச் சிகரெட்டு வெற்றிலைத் தட்டத்தைத்
தந்திடவே சுழலுவதோ ஐந்தாறு பேர்,
மெயிலாலே வருகின்றான் மோனும் மயில்வாகனம்,
கண்ணெல்லாம் சிவப்பு முகமெல்லாம் இருட்டு,
கட்டியுள்ள சாரத்திலே அழுக்கினூடு கண்ணீர்,
போட்டிருந்த சேட்டிலே கசங்கலூடு வியர்வை,
ஒப்பாரி உரக்கிறது; இழவொலியும் ஒலிக்கிறது,
வீடு தாண்டிவந்த நானும்
ஏறி உந்தும் பெடல்களிலே சுழல்கிறது சக்கரம்,
ஆமந்த ஒப்பாரியும் துல்லியமாய் மறைகிறது!

# சீதனம்!

கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம்

எங்கள் வீட்டுநாய் ஈன்ற குட்டிகள்
ஏழு! ஏழிலே மூன்று கடுவன்கள்!
சங்கரன் ஒரு கடுவன் குட்டியும்
தவமணியொரு கடுவன் குட்டியும்

தங்க ராசனும் மிகுதி ஒன்றையும்
தந்து நன்கொடை பிடித்துச் சென்றனர்.
தங்க ளுக்கவை தரவில் லையெனச்
சண்டை யிட்டனர் இன்னும் பற்பலர்!

இந்தப் பெட்டைநாய்க்குட்டி நான்குமோ
எந்தநேரமும் தொல்லை! கொண்டுபோய்
சந்தை கட்குள்ளே விடினும் பாவமே
சந்தி தெருவிலே விடவும் மனமில்லை
கந்தன் நீயொரு உதவி செய்திடு
காசி ருபது ரூபா நல்குறேன்.
இந்தப் பெட்டைநாய்க் குட்டி நாலையும்
எடுத்துக் கொண்டு போய் எவர்க்கும் நல்கிடு!

காசினுக்கெனக் கடுவன் விற்பதும்
காசி னோடு பெண் குட்டி தள்ளலும்
மாசி லை, இவை நாய்கள் என்பதால்!
மனிதர் கூட இந் நாய்கள் மாதிரி
பேசி டில்கொடு நன்கொ டையெனப்
பெண்ணெ னில்கொடு சீதனம் என
ஈசனே! இவர் மனித வர்க்கமோ?
என்ன கந்தன் நீ சொல்லு பார்க்கலாம்!!

# ஏழை - பாட்டாளி - விவசாயி

"கரவைத்தயா"

பஞ்சத்தின் கொடுமைதனில் வாடி
அதில் உழன்று செத்து
கெஞ்சுகிறான் ஒருநேர வுணவுக்கு
ஆனால் மிஞ்சுகிறார் பகுத்தறிவற்றோர்
கஞ்சிக்கு வழியற்ற பாவி
துஞ்சவோ பரந்த வெளிதானுண்டு

எஞ்சும் எச்சில் பண்டமும்
சிலவேளை இல்லாது போய்விடும்.

❋ ❋ ❋ ❋

மாடாக நாளெல்லாம் உழைத்து
கூடாய்ப் போன பாட்டாளி
வாடாத நாளில்லை யெனலாம்,
என்றாலும் இங்கிவனின் இரத்தத்தில்
பெரியோரான முதலாளிக் கும்பல்
பஞ்சணையில் மிதந்திருந்து பாட்டாளிமன
எரிச்சலை தேடாமற் பெறுகின்ற
ரிவரென்ன பேயரோ? முட்டாளே?

❋ ❋ ❋ ❋

குத்தகைக்குக் காணி யெடுத்து
கொத்திப் பண் படுத்தி
வித்தெடுத்து விதைத்துப் பயிராக்கி
வியர்வை சிந்திய விவசாயி
சிந்துகிறான் கண்ணீர் ஏனென்றால்
பயிரெல்லாம் பறி போயிற்றும்
வந்து போகிறார் நிலச் சொந்தக்காரர்
அவர் முகத்தில் ஆடுகிறது மகிழ்ச்சி.


# எம். எஸ். சதாசிவம்

## பல சரக்கு வியாபாரம்

பிரதான வீதி, சுன்னாகம்

**எங்களிடம் எல்லா வகையான**
**பலசரக்குகளும், சாய்ப்புச்**
**சாமான்களும் மொத்தமாகவும்**
**சில்லறையாகவும் கிடைக்கும்.**

இன்றே விஜயஞ் செய்யுங்கள்!

ஸ்ரீ காந்தா அச்சகம் புத்தகசாலை

★ அச்சுவேலைகள்

★ பாடநூல்கள்

★ பலதுறை நூல்கள்

யாவும் சிறந்த முறையில் கிடைக்கும்

**SRI KANTHA**
**PRESS & BOOK DEPOT**

213, K. K. S. Road, JAFFNA Phone 256

சி. தம்பிப்பிள்ளை அன் சன்,

நகை வியாபாரம்

191, கே. கே. எஸ் றோட் — யாழ்ப்பாணம்

உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான

தங்க ★ வைர ★ நகை வியாபாரிகள்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

**S. THAMBIPILLAI & SON,**

MANUFACTURING JEWELLERS

191, K. K. S. ROAD JAFFNA.



# நாவேந்தன் சிந்தனைகள்

கல்வி என்பது மனித குலத்தை நேசிக்கவும், வாழ்விக்கவும் வல்லதாக அமைய வேண்டும். மற்றவனுடைய இரத்தத்தில் ஆடம்பரமாக வாழவும், வேண்டத்தகாத ஆடம்பரங்களைப் பறைசாற்றவும் வழி செய்யும் எதுவும் உண்மையான கல்வியாகமுடியாது!

⚜ ⚜ ⚜

சமுதாயத்தில் இன்று உண்மையான உழைப்பாளி அழுதுகொண்டே வாழ்கிறன். உதட்டிலே சோஷலிசமும், உள்ளத்தில் பூர்சுவாமனப்பாங்கும் படைத்தவர்கள் பெரும் பெரும் பதவிகளில் இருந்துகொண்டு சொகுசு வாழ்க்கை நடாத்திக்கொண்டே மக்களுக்காக வாழ்வதாகப் பம்மாத்துப் பண்ணுகிறர்கள்.

⚜ ⚜ ⚜

உண்மையான இலக்கியவாதி எவனும், உண்மையான இலட்சியப் பத்திரிகை எதுவும் அரசாங்க ஆதரவை எதிர்பார்த்து விழித்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. அரசாங்கமே இலக்கியவாதியையும், இலட்சியப் பத்திரிகையையும் மதித்து நடத்த முன் வருஞ் சூழ்நிலை உண்டாகியே தீரும்.

⚜ ⚜ ⚜

தரமற்ற தமிழ்நாட்டுப்பத்திரிகைகள் அனைத்தும் இங்கு இறக்குமதி செய்யப்படுவது தவிர்க்கப்படுவது அவசியமே. ஆனல் இந்தத் தலையாய பிரச்சனையை முன் வைத்துக்கொண்டே 'தரமற்றதுகள் சில' இங்கு தலைகால்

புரியாமல் ஆட்டம் போட ஈழத்து எழுத்தாளர்களும், வாசகர்களும் இடமளிக்கக் கூடாது!

⚜ ⚜ ⚜

சோஷலிசம் குறிப்பிட்ட ஒரு கட்சிக்காரருக்கு மட்டும் 'குத்தகை'விடப்பட்ட பொருளல்ல. பொதுவுடமைக்கட்சிகளிற்கூட பூர்சுவா மனப்பான்மை கொண்டவர்கள் இருக்கிறார்கள். பாரதி எந்தக் கட்சிக்காரனுமல்ல ஆனால் அவன் சோஷலிச வாதிதானே! எனவே சோஷலிசவாதி குறிப்பிட்ட ஒரு கட்சி உறுப்பினனாக இருக்கவேண்டுமென்பது இன்னொரு விதமான வைதீகமாகும்.

⚜ ⚜ ⚜

எழுத்தாளன் மனத்தூய்மையுள்ளவனாக இருக்க வேண்டும். இந்தத் தூய்மை என்பதன் அர்த்தம் உண்மை என்பதுதான். எழுத்தாளனும் மனிதன் தான். ஆசாபாசங்களில் அவனும் இடறுப்படுபவன் தான். ஆனால் அவற்றைத் துணிந்து சொல்லும், எழுதும் எழுத்தாளனை நான் பெரிதும் மதிக்கிறேன். மற்றும்படி தூய்மை என்ற பேரில் 'திரை' போட்டு விளையாடுகிற 'மக்கள்' எழுத்தாளர்களை காலம் மிக விரைவில் இனங்காட்டுவது தவிர்க்க முடியாததாகும்!

⚜ ⚜ ⚜

காதலைப்பற்றிய எனது கருத்து மிகச்சாதாரணமானது. அதனைத் தெய்வீக நிலைக்கு உயர்த்த நான் தயாராயில்லை ஆனால் ஒரு பெண்ணை ஒரு ஆணும், ஒரு ஆணை ஒரு பெண்ணும் வஞ்சிக்காதபடி ஒருவருக்கொருவர் உண்மையுள்ளவர்களால் நேசிக்கிறவரை அந்த உறவைக் காதல் என்று சொல்ல நான் மிகவும் ஆசைப்படுகிறேன்.

⚜ ⚜ ⚜

காதலுக்காக 'தியாகங்கள்' என்ற கோபுரங்கள் கட்டியெழுப்பப்பட்டதெல்லாம் காவியங்களிலும், கவிஞர்களின் கற்பனையிலுந் தான் இன்றெல்லாம் மிகச்சாதாரணமான ஒரு சலுகைக்காக அந்த 'மகத்தான' காதல் ஏலப் பொருளாகி விடுகிறது!

உலக சமாதானத்துக்காகப் பாடுபடுபவர்கள் இன்று உலகில் யாருமே இலர். கடந்த உலக மகாயுத்தங்களில் மாண்டு போனவர்களின் கல்லறைகள் 'விடும் பெருமூச்சு களில்' ஒரு வேளை அந்த ஆசை பிரதிபலிக்கலாம்!

⚜ ⚜ ⚜

நான் என்ற ஆணவம் மனித தத்துவத்திற்கு எதிரானது. புராண, இதிகாசங்கள் மட்டுமல்ல, வரலாறும், அரசியல் மாவீரர்களின் வீழ்ச்சிகளும் இந்த 'நான்' எனும் ஆணவ நினைப்பினுல் நேரிடும் அழிவைத்தொடர்ந்து நினைவுறுத்துதலை நாமும் கொஞ்சமாவது எண்ணிப் பார்க்க வேண்டும்!


★ ஆடவருக்கு அழகும், கம்பீரமும் தரும்

**வேட்டிகள், சால்வைகள்**

★ மகளிர் மனங்குளிரச் செய்யும்

**மகத்தான புடைவைத் தினுசுகள்**

**பற்பல வண்ணங்களில் கிடைக்கும்**

விபரங்களுக்கு:

நிர்வாகி

**— சக்தி பவர் லூம்ஸ் —**

குரும்பசிட்டி,

தெல்லிப்பளை.

O தொழிற் சங்கப் பிரமுகரான தோழர் எஸ். செல்வராசா சோவியத் நாட்டில் தாம் கண்டு, கேட்டு அனுபவித்த உண்மைகளை இக்கட்டுரையில் சுவையுற விளக்குகின்றார்.

# சோவியத் திருநாட்டிலே மூன்று மாதங்கள்

— எஸ். செல்வராசா —

சோவியத் திருநாட்டைப் பற்றிப் பலவாறு, என் கற்பனைக்கெட்டியவாறு நான் சிந்தித்திருக்கிறேன். பொதுவுடமைப் பூங்காவான அந்நாட்டின் தேசபக்த மக்களைப்பற்றியும் அந்நாட்டில் புரட்சிக்குப் பின்னர் பூத்தெழுந்த புதிய சமுதாயத்தைப் பற்றியும் மனக்கண்ணால் எதையெல்லாங் காண முடியுமோ அந்த அளவுக்குக் காண முயற்சித்திருக்கிறேன். ஆனால் யதார்த்தமாகச் சோவியத் திருநாட்டில் நான் மானசீகமாகத் தரிசித்து மகிழ்ந்த அந்த நாட்டில் காலடி எடுத்து வைக்கும் பாக்கியம் கிடைத்த போது நான் அடைந்த மகிழ்ச்சிக்கோரளவில்லை. கட்டுநாயகா சர்வதேச விமான நிலையத்திலிருந்து விமான மூலம் புறப்பட்ட யான் (2-9 69) கராச்சி, தாஷ்கண்ட் வழியாக திங்கட்கிழமை அதிகாலை மாஸ்கோ சர்வதேச விமான நிலையத்தில் சென்று இறங்கினேன். விமானத்திலிருந்து கீழிறங்கிறதும் உடல் முழுதுமே விறைத்துவிடும் படியான கொடுங் குளிரில் தவிக்க நேர்ந்தது. ஒருவாறு உள்ளபோர்வைகளினால் சமாளித்துக் கொண்டேன். என்னை வரவேற்க கட்சியின் மத்திய குழு உறுப்பினர் திரு. வலோஜாவும், மொழிபெயர்ப்பாளர் ஒருவரும் வந்திருந்தனர். விமான நிலையத்திலேயே சோவியத் மக்களின் மனிதாபிமானத்தையும், சமாதான உணர்வையுந் தரிசித்தேன். கட்சியின் மத்திய குழு உறுப்பினரான திரு. வலோஜா எனது பெட்டியைத் தமது கரங்களில் எடுத்துக்கொண்டார் என்னை எவ்வித அலுவலுஞ்

செய்ய அவரனுமதிக்கவில்லை எல்லாவற்றையுந் தாமே செய்தார். நெடுநாள்களாக எனக்கிருந்து வந்த குடல் நோய்க்குப் பரிசோதனை செய்வதே முதல் நிகழ்ச்சியாக அமைந்தது. மாஸ்கோவிலுள்ள பொலிகிளினிக்கில் பரிசோதனை செய்து கொண்டேன். அங்கு பத்து நாள்கள் தங்க நேர்ந்தது. சர்வதேசங்களிலுமுள்ள கட்சி ஊழியர்களின் உடல் நலந்தில் அக்கறை காட்டுவதற்காக அமைந்துள்ள இவ் வயித்திய பரிசோதனை நிலையத்தில் ஐந்து நோயாளிகளுக்கு ஒரு டாக்டர் வீதம் கடமையாற்றுகின்றனர். சத்திரசிகிச்சை என்பது சோவியத் டாக்டர்களைப் பொறுத்தவரை கடைசிக் கட்டத்திலேயே நடை பெறுவதாகும் எமது நாட்டிலே நடைபெறுவது போல எடுத்ததற்கெல்லாம் 'ஆப்பரேசன்' நடப்பதில்லை பத்து நாட்கள் அங்கு தங்கிய பின்னர் அவர்களுடைய சிபார்சின் பேரில், மாஸ்கோவிலிருந்து 1300 மைல் தொலைவிலுள்ள ஏசன்துக்கி என்னுமிடத்தில் அமைந்துள்ள கலீலின சனிடோரியத்தில் இருபத்து மூன்று நாள்கள் ஓய்வுபெறச் சென்றேன். நான் சென்ற விடமெல்லாம் எனது மொழி பெயர்ப்பாளர் செல்வி ஜெயினியாவும் கூடவே வந்தார் அங்கு எனக்குப் பலவிதமான உடல்நலப் பயிற்சிகளும், சிகிச்சைகளும் அளிக்கப்பட்டன. உலகத்திலேயே மிகச் சிறந்ததானதும், குடல்நோய்களுக்கு ஔடதமானதுமான 'மினறல்வாட்டர்' தரப்பட்டது இதனால் எனது நோய் பூரணமாகக் குணப்பட்டது. இந்த மருந்துவமனைகளில் தங்கிய பின்னர் எனது சோவியத் பிரயாணத்தின் முக்கிய பகுதிகள் ஆரம்பித்தன. முதலாவதாக லெனின்கிராட் நகருக்குச் சென்றேன். அங்குள்ள சரித்திர முக்கியத்துவம் பெற்ற இடங்களையும், காட்சிகளையும் பார்வையிடலானேன். புரட்சியின் நாயகரும், மகாபுருசருமான லெனின் தலைமறைவாக வாழ்ந்த இடம், புரட்சியின் முதற் குரலை எழுப்பிய சரித்திரப் பிரசித்திபெற்ற அரோரக் கப்பல் ஜெர்

மனியருடன் சோவியத் மக்கள் செய்த யுத்தம் பற்றிய காட்சிகள் திரைப்படங்கள் யுத்தத்தில் உயிர் நீத்த வீர புருடர்களின் சமாதிகள் என்பவற்றைக் கண்டு புளகாங்கிதமுற்றேன், சோவியத் ரஷ்யாவில் மிகப்பெரிய இரண்டாவது பட்டினமாக விளங்குவது லெனின்கிராட் நகரமாகும். அங்கு எந்நாளும் மக்கள் லட்சோப லட்சமாக நிரம்பி வழிந்துகொண்டிருப்பர் நாடெங்கிலும் மக்களைப் பொறுத்தவரை உத்தியோக அந்தஸ்து பேதம் பாராட்டுவதேயில்லை. அவ்வாறே அவர்கள் பெறும் வேதனத்திலும் (இங்குள்ளதனைப்போல) பாரதூரமான வித்தியாசங்கள் தென்படமாட்டா ஒரு மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவரும்,சில்லறை ஊழியரும், தொழில் நுட்ப நிபுணர்களும் சாதாரணமாக அலுவலகத்துக்குச் செல்லும்போது ஒரேமாதிரியான ஆடை அணிகளுடனேயே செல்வர். குறிப்பிட்ட அலுவலகத்துக்குள் மட்டுமே உத்தியோக ரீதியான உடைகளில் தென்படுவர். கூட்டுப் பண்ணை முறையில் விவசாயப் பெருமக்கள் அற்புதமான வாழ்க்கை நடாத்துகின்றனர். கல்வி, மருத்துவம், வாழ்க்கை வசதிகள் யாவற்றிலும் அவர்களுக்கு எவ்விதமான குறைபாடுகளுமே இருப்பதாகத் தெரியவில்லை. அரசாங்க தாபனங்களும் கூட்டுப் பண்ணைகளும் கட்சியின் முடிவுகளை நடைமுறைப் படுத்துவதில் முழு ஒற்றுமையும், நம்பிக்கையும் உள்ளவர்களாகச் செயற்படுகின்றன. சமூக முரண்பாடுகள் எதுவும் ஆங்கு இல்லையென்றே கூறவேண்டும்!

சோவியத் மக்களும், அரசும் கட்சியும், கனரகத் தொழில்களின் வளர்ச்சியிலும், உண்வுப்பொருள்களின், உடைகளின் உற்பத்தியிலுமே அதிக நாட்டங் கொண்டுள்ளனர். ஆடம்பரமான படாடோபமான வாழ்க்கையில் அவர்களுக்கு எவ்விதமான பிடிப்போ, மோகமோ கிடையாது ஆடம்பரப் பொருள்களை அவர்கள் உற்பத்தி செய்வதேயில்லை. மிகக்குறைவான உற்பத்தியென்று குறிப்பிடலாம். மக்களின் எளிமையான வாழ்க்கையும், தேசபக்தியும் தன்னம்பிக்கையும் இயல்பாகவே அவர்கள்

மீது எனக்கு அதிக மரியாதையைத் தோற்றுவித்தன. அங்கு நானிருந்த காலத்தில் கட்சியின் மத்திய கமிட்டி அங்கத்தவர்கள் பலரைச் சந்தித்தேன். உரையாடினேன். வெளிநாடுகளில் மாறிவரும் புத்திபூர்வமான, விஞ்ஞான பூர்வமான அரசியல் மாற்றங்களை அவர்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர். மகாத்மாகாந்திஜீ, ஜவகர்லால் நேரு, எஸ். டபிள்யூ ஆர். டி பண்டாரநாயகா போன்ற மகத்தான தேசியத் தலைவர்கள் மீது அவர்கள் அளவுகடந்த மதிப்பும், மரியாதையுங் கொண்டுள்ளனர். சோவியத் மக்களும், இந்திய, இலங்கைத் தலைவர்களாக மிளிர்ந்து அமரர்களாகிவிட்ட இத்தலைவர்கள் பற்றி நன்கு தெரிந்து கொண்டுள்ளனர். குறிப்பாக 1956ம் ஆண்டில் நமது நாட்டில் பண்டாரநாயகா அரசு செய்த மகத்தான மாற்றங்களை அவர்கள் மனப்பூர்வமாக வரவேற்கின்றனர். சோவியத் அறிஞர்களிடையே பன்மொழிகளிலும் பயிற்சி பெற்றவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் பரவலாகப் பொது மக்களிடையே அவரவரது தாய்மொழிகளும், அவற்றுக்கு அடுத்ததாகப் பிரஞ்சு மொழியுமே அறிந்தவர்களாக இருக்கின்றனர். ஆங்கில அறிவுள்ளவர் மிகச் சொற்பதொகையினரே. சோவியத் மக்கள் யுத்தத்தை எதிர்ப்பதிலும், சமாதானத்தை நேசிப்பதிலும், உலக மக்களுக்கு உதாரண புருஷர்களாக ஆதர்ச வழிகாட்டிகளாக விளங்குகிறார்கள். சோவியத் திருநாட்டில் தங்கியிருந்த மூன்று மாதங்களிலும் இந்த நிலையான உண்மையினை நான் எங்குமே தரிசிக்கவே முடிந்தது. அந்த நினைவுகள் என்றுமே என் மனதைவிட்டகலாப் பசுமை பசுமையானவையே.

இரசிகமணி

# க. செ. பேசுகிறார்!

இரசிகமணி கனக செந்திநாதன் முப்பத்திரண்டு ஆண்டுகளாக ஒரு எழுத்தாளராக விளங்குகிறார். கவிதை வானில் ஒரு வளர்பிறை, மூன்றாவது கண், ஈழத்து கவிமலர்கள், ஈழத்து இலக்கிய வளர்ச்சி, கலை மடந்தையின் தவப்புதல்வன், வெண்சங்கு. பிரபந்தப் பூங்கா என்பன அவர் எழுதி இதுவரை வெளிவந்த நூல்களாகும். இன்னும் நாடகங்கள், ஆய்வுக்கட்டுரைகள், பாடநூல்கள், பதிப்புக்கள், என்றெல்லாம் பல துறைகளில் நூல்களாக வெளிவர வேண்டிய விடயங்கள் அவரிடம் குவிந்து கிடக்கின்றன, இரசிகமணி க. செ வை.ஈழத்திலும் தமிழகத்திலும் அறியாதார் அறியாதாரே! அவரது பேட்டியினை "நாவேந்தன்" ஆண்டுமலரில் பிரசுரஞ் செய்வதுடன். அவரதுபுகைப்படத்தை அட்டையிலும் பிரசுரஞ்செய்வதின் மூலம் நாம் பெரிதும் மகிழ்ச்சியடைகிறோம். அத்துடன் இலக்கியரீதியாக எமக்குள்ள சார்பற்ற தன்மையினையும் பிரகடனப்படுத்துகின்றோம், இரசிகமணியின் கருத்துக்கள் யாவும் எம்முடன் ஒருப்பாடுடையவைவல்ல, பல விடயங்களில் எனக்கும் அவருக்கும் தர்க்கரீதியான நிலையான கருத்து வேறு பாடுகளுண்டு. ஆனல் இரசிகமணி தலை சிறந்த இலக்கியகாரர் என்பதில் எனக்கு எவ்வித ஐயப்பாடுமில்லை: வாசகர்கள் இரசிகமணியை இந்தப்பேட்டி மூலம் புதிய கோணத்தில் தரிசிக்கலாம்

— நாவேந்தன்

---

கே. நீங்கள் இலக்கியத்துறைக்கு வந்தகாலமும், அவ்வாறு வருதற்குத்தூண்டுதலாக இருந்த காரணங்களும் எவை?

ப. இலக்கியத்தின்மீது எனக்கு நாட்டம் பிறந்ததே, உயர்வகுப்பில் நான் திருநெல்வேலியில் படிக்க நேர்ந்ததும் ஆங்கிருந்த சைவாசிரிய கலாசாலையில் ஆசிரிய

பயிற்சி பெற நேர்ந்ததுமே. இதில் அமரரான பேரா சிரியர் கைலாசபதியின் வழிநடத்துதலை நான் மறக்க முடியாது. பின்னர் ஈழகேசரி அதிபர் பொன்னையா அவர்களின் தொடர்பும், ஈழத்தின் புகழ்மிக்க எழுத் தாளரும், அப்போது ஈழகேசரி ஆசிரியராயிருந்த சோ. சிவபாதசுந்தரம் அவர்களது நட்பும், குரும்ப சிட்டி சன்மார்க்க சபை வாசகசாலையின் துணையும், பிர பலம் பெற்ற மறுமலர்ச்சிச் சங்கத் தொடக்கமும் என்னை இந்த நிலைக்குக் கொணர்ந்தன. 1938 லேயே நான் எழுதப் தொடங்கினேன்.

கே. ஈழத்தில் தமிழிலக்கியவளர்ச்சிக்கு இன்றுள்ள சாதக, பாதகமான நிலைபற்றிய உங்கள் கண்ணோட்ட மென்ன?

ப. பாடசாலை முதல் பல்கலைக்கழகம்வரை தமிழில் கல்வி புகட்டப்படுதல் முன்னரிலும் பார்க்க இப்போது தமிழிலக்கிய ஆர்வம் வளர்ந்துள்ள சூழ்நிலை இருக்கிறது. ஆனால் தரஞ்சிறந்த படைப்புக்கள் இன்னும் அதிகமாக நமது நாட்டில் மலரவேண்டும். வாசகர் வட்டம் நன்கு விரிவடைந்துள்து. பாதகமானதாகக் குறிப்பிடக்கூடியது தென்னிந்திய பத்திரிகைகளின் தாக்கமே லாபகரமான தாக இலக்கியப் பத்திரிகை நடத்தலாம் என்பதில் நம்பிக்கையற்றவர்கள் நமது நாட்டுத் தனவந்தர்கள். இதனுலெல்லாம் நமது இலக்கியப் படைப்பாற்றலுக்குப் பாதகமே ஏற்படுகிறது.

கே தென்னிந்திய சஞ்சிகைகளைத் தடைசெய்வது என்ற பிரச்சனையில் உங்கள் கருத்தென்ன?

ப. இந்தத் தடைக்கோஷமே இப்பொழுதுதான் பொத் தென்று பிறக்கவில்லை சிலர் அப்படி மாருட்டம் போடு கிருர்கள்! எங்கள் நூல்தள், எங்கள் எழுத்தாளர்கள் என்று முதற் குரல் எழுப்பியவன் நான் ஆனுல் தரமான பத்திரிகைகளைப் பெறுவதற்கு எவ்வித தடையும் இருக்கக் கூடாது. தனிப்பட்ட ஒரு சிலரோ ஒரு அமைச்சரோ இதற்

குத் தீர்வுகாணுமல் பரவலான முறையில் ஒரு விசாரணைக் குழுவை அமைத்து அவசரப்படாமல். நிதானமாக ஒரு முடிவு எடுக்க வேண்டும். எப்போதுமே தென்னிந்தியா எம்மை விஞ்சி நிற்பதாக நான் கருதுவதில்லை இங்கு வசதிகள் குறைவு. அங்குள்ளதைப் போன்ற வசதிகள் இருப்பின் மேலும் சிறந்த பல இலக்கியப் படைப்பாளர்கள் எம்மிடையே தோன்றியிருப்பர்.

கே. ஈழத்தில் சிறுகதை இலக்கியம் வளர்ந்துள்ள அளவுக்கு நாவல், கவிதை இலக்கியத் துறைகள் வளரவில்லை என்று தான் நான் கருதுகிறேன். உங்கள் கருத்தென்ன?

ப. அப்படியல்ல! சிறுகதையும், கவிதையும் வளர்ந்த அளவுக்கு நாவல் வளரவில்லை. இப்படிச் சொல்லும்போது 1945 வரை தமிழ் நாட்டிலும் இதே நிலையிருந்தது என்பதனை நினைவிற் கொள்ள வேண்டும். பின்னர் திடீர்ப் பாய்ச்சலில் 1950 ஆண்டின் பின் முப்பத்தைந்து நாவல்கள் வரை வந்தாலும் ஐந்தோ ஆறோ நாவல்கள் தான் குறிப்பிடத்தக்கனவாக உள்ளன. எமது நாட்டிலுஞ்சரி தமிழ் நாட்டிலுஞ்சரி பெரிய அளவில் நாவல் படிக்க எல்லாருந் தயங்குவது பகிரங்கமான உண்மை. கவிதைத் துறை ஈழத்தில் நன்கு வளர்ந்திருக்கிறது! ஐம்பதாம் ஆண்டுக்குப் பின் 100 கவிதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. இவை ஓசை, சந்தம், யாப்பமைதியிற் சிறந்தன. தமிழ் நாட்டில் பலர் "கவிஞர்களாக" குறிப்பிடப் பட்டாலும் ஒரு பத்துப் பேருக்கு மேல் ஒழுங்கான யாப்பமைதியுள்ள கவிதைகளை எழுதக்கூடியவர்கள் இல்லை யெனலாம். எதிர்காலத்தில் நம்மவர்கள் இன்னும் வளர இடமிருக்கிறது. சமய சம்பந்தமான கவிதை நூல்கள் எம்மிடம் நிறைய உண்டு காவிய ரூபத்தில் கவிதை நூலைப்படைக்க தற்காலக் கவிஞர்கள் பலராலும் முடியாது. அவ்வாறு படைத்தற்கு ஒரு நாவலை எழுதுஞ் சக்தியளவுக்கு விடய ஞானமும், கவிவளமும் பெருகி நிற்கவேண்டும். சொற்பஞ்சப் படுபவர்கள் ஒருபோதும் காவியங்களைப் படைக்க இயலாது.

# அரபுநாடுகள் - இஸ்ரேல் பிரச்னை
# யுத்தமா? சமாதானமா?

அரபுநாடுகளும், இஸ்ரேலும் தமது நெடு நாளைய பகையினை மறந்து சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிடும் சாத்தியக் கூறுகள் தென்படுகின்றது என்று அகில உலகிலும் பத்திரிகைச் செய்திகள் பிரமாதப் படுத்துகின்றன. ஆனால் எகிப்தும், இஸ்ரேலும் சமாதானப் பேச்சுக்கு ஒப்புக்கொண்ட சில தினங்களுக்குள்ளாகவே பரஸ்பரம் ஒருவரையொருவர் "யுத்த மீறல்" செய்வதாகக் குற்றஞ்சாட்டுகின்றன. இதற்குள் அரபு கொமெண்டாக்களும், கொரில்லாப்படை வீரர்களும் யுத்த நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று ஒரேயடியாக அடித்துச் சொல்லிவிட்டனர். இதனால் உலகமே அமைதியிழந்து தவிக்கிறது. என்றுதான் அரபு நாடுகளுக்கும், இஸ்ரேலுக்கும் நிலையான சமாதானம் உருவாகும் என்று உலக நாடுகள் ஆறுதலாய் இருக்கின்றன! ஆனல் உள்ள நிலைமையைப் பார்க்கும் போது அரபுநாடுகளோ, இஸ்ரேலோ சமாதானத்தின் மூலம் பிரச்னைக்குத் தீர்வுகாணக் கூடும் என்ற நம்பிக்கைக்கு இடமிருப்பதாகத் தெரியவில்லை. யுத்தமொன்றுதான் இவர்களுக்கு நிலையானதொரு முடிவினைக் கொடுக்கக் கூடும் என்பதிலும் அர்த்தம் இல்லாமலில்லை! எனவே இப்போதைய 'அமைதிநிலை' ஒரு தற்காலிகமான பொய்த் தோற்றம் என்றே கூறவேண்டும்!

# கேரளத்துப்பெண்கள் கிளப்பிய பிரச்சனை!

அண்மையில் இந்திய மக்கள் சபையில் கேரளத்து அழகிகள் பற்றிய பிரச்னை பெரும் பூகம்பம் ஒன்றையே சிருட்டித்து விட்டது. இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி முதலான நாடுகளுக்கு கேரளத்தைச் சேர்ந்த அழகிய இளம் பெண்களை அனுப்புவதனையே தொழிலாகக்கொண்

டிருக்கும் கத்தோலிக்க மதகுருவான புத்தன்புரா என்பவரின் பாஸ்போர்ட்டை இந்திய அரசு ரத்துச்செய்திருக்கின்றது. இம்மதகுருவினுல் மேற்படி நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ள இளம்பெண்கள் பலர் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியதாயும், விபச்சாரிகளாகவும், அடிமைகளாகவும் மாற்றப்பட்டதாயும் ஆதாரபூர்வமான செய்திகள் இந்திய அரசுக்குக் கிடைத்துள்ளனவாம். டாக்டர்களாகவும், கன்னியாஸ்திரிகளாகவும், தாதிகளாகவும் வரலாம் என ஆசை காட்டி இப்பெண்களை 'ஏற்றுமதி' செய்த மதகுரு 'இப்பெண்களிற் பலர் இளவரசி போல வாழ்கிறுர்கள்' என வாய்ச்சவடால் அடிக்கும்போதே திடுக்கிடத்தக்க இவ்வுண்மைகள் உலகறிய வந்துள்ளன. இந்திய நாட்டுக்கும், இந்தியப் பெண்குலத்துக்கும் அவமானத்தைத் தேடிக்கொடுத்த பணவாஞ்சை பிடித்த 'புத்தன்புராக்'க்களுக்கு தேசத்துரோகத் தண்டனைக்குரிய கடுந் தண்டனை வழங்கப்பட வேண்டும் என இந்தியமக்கள் ஆவேசக்குரல் எழுப்புகிறுர்கள்!

# இரண்டு கொத்து அரிசி!

'பசித்த வயிற்றுக்கு ஆகாரமளிக்கின்ற பரமனைப் பற்றிப் பேசு' என்றுர் பண்டித நேரு ஒருமுறை. இலங்கை மணித்திருநாட்டில் அரசை மாற்றியமைத்த பெருமையையே இந்த அரிசியைத்தான் சாரும். இத்தகைய மகா வல்லமை பொருந்திய அரிசியை கூப்பன் ஒன்றுக்கு வாரத்திற்கு இரண்டு கொத்தாக வழங்கவிருக்கிறது மக்கள் அரசாங்கம். மக்கள் பிரதமர் பண்டாரநாயகா அமரரான செப்டம்பர் 26ம் தேதியிலிருந்து இரண்டு கொத்து அரிசி வழங்கும் திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது. இதனுல் நாட்டிலுள்ள ஏழை, எழியவரின் பசித்துயரில் பெரும் பகுதி ஒழிய வழி பிறக்கும் என்ற நம்பிக்கையுடன் மக்கள் அரசின் இந்த நடவடிக்கையை மனப்பூர்வமாக வரவேற்கின்றோம்!

உங்கள் அச்சு வேலைகளுக்கு

தமிழ்

சிங்களம்

ஆங்கிலம்

சமஸ்கிருதம்

என்னும் மொழிகளில்

குறித்த நேரத்தில் நியாயமான செலவிற் செய்விற்க

ஆசீர்வாதம் அச்சகம்

32, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 274

அழகும் பிரகாசமும்

உழைக்கும் திறனும் ஒருங்கே

அமையப் பெற்றவை

# யாழ் - மார்க்

அலுமினியப் பாத்திரங்கள்.

## யாழ் மெட்டல் இன்டஸ்றீஸ்,

250,252, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்

## Yarl Metal Industries,

250, 252, K. K S. Road, JAFFNA.

T' Phone. 7049.


ஆசிரியரும் வெளியிடுபவரும் திரு. ரி. எஸ். ஆனந்தன் 'மலரகம்' ஏழாலை வடக்கு, சுன்னாகம். அச்சிட்டவர் பிரம்ம ஸ்ரீ. சி. கனகசபாபதிஐயர் அவர்கள், கலாதேவி அச்சகம், சுன்னாகம்.